KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

# The situation of Tamil migrants during the Japanese occupation

**Palthamburaj Kingston[1] & Logeswary Arumugum[2]**
*Assistant Professor*
*Asian Languages & Cultures Academic Group*
*Tamil Language & Culture Division*
*National Institute of Education*
*Nanyang Technological University*
*Singapore*
*Email:palthamburaj.k@nie.edu.sg*
*2 Teacher, SMK Pokok Sena,*
*Penang*

Received 30/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

## Abstract

*This study examines the political, economic, and social conditions of Malaysian Tamils under Japanese rule from 1941 to 1945. The primary objective is to analyze the challenges faced by the Tamil community during this period and understand the transformations they underwent. This research employs historical analysis, archival research, and oral history as primary methodologies. The study is framed using Postcolonial Theory, Diaspora Theory, and Marxist Analysis. The paper is structured into five key sections: (1) Introduction, (2) Historical Context, (3) Impact of Japanese Rule, (4) Theoretical Analysis, and (5) Conclusion. Under Japanese rule, Malaysian Tamils experienced severe exploitation and resistance. Their working conditions deteriorated, education was restricted, and cultural identities were suppressed. However, they demonstrated resilience and adaptability in overcoming adversities.*

***Keywords****: Japanese rule, Malaysian Tamils, Colonialism, Resistance, Economy, Social Changes...*

---

## சப்பானியர் ஆட்சிக் காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலை

**பால்தம்பராஜ் கிங்ஸ்டன்[1], லோகேஸ்வரி ஆறுமுகம்[2]**
*1 உதவிப் பேராசிரியர் ஆசிய மொழிகள் மற்றும் கலாச்சாரங்கள் கல்விக்குழு*
*தமிழ் மொழி மற்றும் கலாச்சாரப் பிரிவு தேசிய கல்வி நிறுவனம் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்*
*சிங்கப்பூர் மின்னஞ்சல்: palthamburaj.k@nie.edu.sg*
*2 ஆசிரியர், SMK பொகோக் சேனா, பெனாங்*

## கட்டுரைச் சுருக்கம்:

*இந்த ஆய்வு 1941-1945 ஆம் ஆண்டுகளில் சப்பானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நிலையை ஆய்வு செய்கிறது. ஆய்வின் முக்கிய நோக்கம், அந்த காலகட்டத்தில் தமிழர்கள் சந்தித்த சவால்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் அவர்கள் எதிர்கொண்ட மாற்றங்களைப் புரிந்துகொள்வதாகும். இந்த ஆய்வு வரலாற்று பகுப்பாய்வு, ஆவணப்பூர்வ ஆராய்ச்சி மற்றும் வாய்வழி நினைவுச் சான்றுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது. பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு, பரவலா கோட்பாடு மற்றும்*

*மார்க்சியக் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரை ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது: (1) ஆய்வின் அறிமுகம், (2) வரலாற்றுச் சூழல், (3) சப்பானிய ஆட்சியின் தாக்கம், (4) கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு, மற்றும் (5) முடிவுரை. சப்பானிய ஆட்சியின் கீழ், மலேசியத் தமிழர்கள் கடுமையான சுரண்டலையும் எதிர்ப்புப் போராட்டங்களையும் சந்தித்தனர். தொழிலாளர் நிலைமைகள் மோசமடைந்தன, கல்வி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன, மற்றும் கலாச்சார அடையாளங்கள் பாதிக்கப்பட்டன. இருப்பினும், தமிழர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களைத் தக்க வைத்துக் கொண்டனர்.*

---

***கருச்சொற்கள்:*** *சப்பானியர் ஆட்சி, மலேசியத் தமிழர்கள், காலனித்துவம், எதிர்ப்பு, பொருளாதாரம், சமூக மாற்றங்கள்..*

**அறிமுகம்**

மலேசியத் தமிழர்கள் வரலாற்றில் 1941-1945 ஆண்டுகளின் சப்பானியர் ஆட்சிக் காலம் முக்கியமான மாற்றங்களைக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ், தமிழர்கள் மலேசியாவில் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டனர். பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு (Postcolonial Theory), புலம்பெயர்ந்தோர் கோட்பாடு (Diaspora Theory) ஆகியவற்றின் அடிப்படையில், அவர்கள் சந்தித்த ஒடுக்குமுறைகள், போராட்டங்கள் மற்றும் சமூக மாற்றங்களை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரிட்டிஷ், 1914-ஆம் ஆண்டிற்குள் மலாயா (தற்போது மலேசியா) முழுவதையும் கைப்பற்றியது. மலேசியாவின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அதிக லாபம் ஈட்ட, உடலுழைப்புத் தொழிலாளர்களை பெரும் எண்ணிக்கையில் தேவைப்பட்டனர். இதன் விளைவாக, தென்னிந்தியாவைச் சேர்ந்த ஏழை, கல்வியறிவு இல்லாத தமிழர்கள் மலேசியாவிற்கு கொண்டு வரப்பட்டனர். ஒப்பந்தக் கூலிமுறை (Indentured Labour System) மற்றும் கங்காணி முறை (Kangani System) ஆகியவற்றின் மூலம், இவர்களை தோட்டங்கள் மற்றும் தொழில்களில் பணியாற்ற அழைத்துக் கொண்டுவந்தனர். 1941-ஆம் ஆண்டு, ஜப்பான் மலேசியாவைப் பிடித்ததும், பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆனால், தமிழர்களின் நிலை மேலும் மோசமடைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த போதே கடுமையான சுரண்டலுக்குள்ளான அவர்கள், சப்பானிய ஆட்சியில் அதைவிட மோசமான பொருளாதார, சமூக தடைகளுக்கு ஆளானார்கள். இந்தியத் தேசியப் படையின் (INA) உருவாக்கம், தமிழர்களின் அரசியல், சமூக நிலையை மாறச்செய்தது. பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு பார்வையில், பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர்ந்தோர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆய்வு, மலேசியத் தமிழர்களின் வரலாற்றை புதுப்பிக்கின்றதோடு, அவர்களின் அடக்குமுறைகள், போராட்டங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மலேசியத் தமிழர்கள் பிரிட்டிஷ் காலனித்துவத்திலும், சப்பானிய ஆட்சியிலும் சமமான சிரமங்களைச் சந்தித்ததை இந்த ஆய்வு வெளிக்கொணர்கிறது.

**ஆய்வின் நோக்கம்:**

சப்பானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்களின் வாழ்க்கைமுறை, அரசியல் நிலை, பொருளாதார மாற்றங்கள் மற்றும் அவர்களின் எதிர்ப்புப் போராட்டங்களை புரிந்துகொள்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு வினாக்கள்:**

1) சப்பானிய ஆட்சிக்காலத்தில் மலேசியத் தமிழர்கள் எதிர்கொண்ட முக்கியமான மாற்றங்கள் யாவை?
2) தமிழ் சமூகத்தின் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார மாற்றங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன?
3) இக்காலகட்டத்தை மறைமுகமாக அல்லது திறந்தவெளியாக எதிர்கொண்ட எதிர்ப்புப் பாணிகள் எவை?

**ஆய்வுத்தரவுகள்:**

இரா.தண்டாயுதம் அவர்களின் மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் ஆய்வுத்தரவுகளாக எடுக்கப்பட்டுள்ளது.

**வரலாற்றுச் சூழல்**

**சப்பானிய ஆட்சிக்கு முந்தைய மலேசியத் தமிழர்கள்**

மலேசியாவில் இந்தியர்களின் வருகை கிறிஸ்துவுக்கு முன்னரே இருந்தாலும் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தான் இவர்கள் பெருமளவில் இந்நாட்டிற்கு சஞ்சிக் கூலிகளாக கொண்டு வரப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் காலத்தில் தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்டனர். இவர்கள் மலேசியாவின் ரப்பர் தோட்டங்களிலும், புகையிலை மற்றும் சாகுபடி பணிகளிலும் ஈடுபட்டனர்.

தொடக்கத்தில் கரும்பு, காப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் அதனை அடுத்து இரப்பர் தோட்டங்களில் பணிபுரிவதற்கும் இழுத்து வரப்பட்டனர். ஒப்பந்தக் கூலிமுறை அடிப்படையில் அழைக்கப்பட்ட தமிழர்கள், இம்முறை தடை செய்யப்பட்டதும் கங்காணிமுறைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். இந்த முறையில் கங்காணி ஒருவர் தமிழ்நாட்டின் சிற்றூர்களுக்குச் சென்று ஆசை வார்த்தைகளைப் பொழிந்து பொய்யான உறுதிமொழிகளைத் தந்து தொழிலாளர்களை அழைத்து வருவார். அதிலும், தொழிலாளர்களுக்குத் தலைவராகச் செயல்பட்ட கண்காணி அவர்களைத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தொழிலாளர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து பொருள் ஈட்டினர். கடன்பட்டவர்கள் அடைக்கமுடியாமல் தொடர்கடனாளிகளாகவே வாழ்ந்து துன்புற்றனர். கண்காணி செய்த துரோகம் போதாதென்று பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி புரிந்த கொடுமைகளையும் எண்ணி அப்பாவி மக்கள் உள்ளம் குமுறினர். வாழ்வுதேடி வந்த இடத்தில் அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. மலாயா சொர்க்கபூமி என்று கூறியோர் பொய்யை மெய்யென்று நம்பிய மக்களுக்குக் கொடிய விலங்குகள், குருதி உறிஞ்சும் அட்டைகள், மலேரியக் கொசுக்கள் நிறைந்திருந்த இருள் அடர்ந்த காடே புகலிடமாகக் காட்சியளித்தது. அத்தகைய மண்ணைச் செல்வம் கொழிக்க வேண்டிய நாடாக்கக் கொண்டிருக்கும் கடமையை எண்ணி நடுங்கினர். இவர்களின் குமுறல்களைக் கீழ்கண்ட நாட்டுப்புறப் பாடல் பிரதிபலிக்கிறது.

“காடுமலை மேடுபள்ளம்

கண்டகண்ட இடங்களில்லெல்லாம்

மாடுபோல உழைக்கணும்

மலையேறிப் பாடுபட்டு

ஊடுருவிப் போவுதய்யா இதநினைக்க

அப்பப்பா பசிக் கொடுமை....”

(தண்டாயுதம், இரா. பக் 20)

வந்த பாதை ஒரு வழியானதால் வேறு வழியின்றி மின்சாரக் கருவிகளற்ற அக்காலத்தில் உடல் உழைப்பாலே அனைத்தையும் செய்து தமிழர்கள் நாட்டை வளமாக்கினர். கொடிய சூழல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமுதாய மலர்ச்சிக்கு வழியில்லாமல் போனது. மலேசியத் தமிழர்களின் வாழ்வு அவர்கள் குடியேறிய காலம் தொடங்கி முதலாம் உலகப்போர்க்காலம் வரை மிகக் கடுமையான காலமாகக் காணப்பட்டது. இக்காலக்கட்டம் நாட்டின் வளமைக்கு உழைப்பதிலேயே செலவாயிற்று. அது வேளாண்மையையே மையமாகக் கொண்டு செயல்பட்ட காலம்.

**பிரிட்டிஷ் அரசின் தமிழ் மக்களை அணுகும் கொள்கைகள்**

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், மலேசியாவில் தமிழர்கள் பெரும்பாலும் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும், தோட்டத் தொழிலாளர்களாகவும் பணியாற்றினர். பிரிட்டிஷ் அரசின் அணுகுமுறை, தமிழர்களை ஒழுங்கற்ற நிலையில் தொழிலாளர்களாக வைத்திருந்தது. அவர்களின் வாழ்க்கை நிலை பெரும்பாலும் கடினமானதாகவும், சுரண்டல் நிறைந்ததாகவும் இருந்தது. அவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டது, மேலும் அவர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன. மேலும், தொழிலாளர் சங்கங்கள் உருவாகுவதற்கான சூழல் குறைவாக இருந்தது. பிரிட்டிஷ் அரசு தொழிலாளர் இயக்கங்களை கட்டுப்படுத்தியது, மேலும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுவதை கடினமாக்கியது. தொழிலாளர் சங்கங்கள் அமைப்பது ஒடுக்கப்பட்டது. இந்த கொள்கைகள் தமிழர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை கடுமையாக பாதித்தது.

*பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தமிழர்கள் கடுமையான சுரண்டலுக்கும், துயரத்திற்கும் ஆளானார்கள். தமிழர்களைத் துச்சமாக எண்ணி, வெறும் உழைப்புக்காக அவர்களின் குருதியை வெள்ளையர்கள் உறிஞ்சினர். சுத்தமான குடிநீர் இன்றி தவித்தனர்; அஞ்சி வாழ்ந்தனர். சுகாதாரமற்ற வாழ்க்கையை வாழ்ந்து மடிந்தவர்கள் பலர். இதனை கீழேயுள்ள பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.*

*"குளத்திலே தண்ணிவரும் என்னப் பெத்த ஐயாவே*

*நீ பெத்த பொண்ணுக்குக் குண்டா சுழண்டுவரும்*

*கோட்டா தண்ணியின்னு நான் குடிக்கத்தான் அஞ்சினனே!"*

*இரப்பர் பால் உறைவதற்கு மருந்து கலக்கப்படும் நச்சுத் தன்மை கொண்ட நீரைத்தான் 'கோட்டா தண்ணி' எனக் கூறுவர். ஆக, குடிக்கச் சுத்தமான நீர்கூட இல்லாமல் மக்கள் தவித்திருந்தனர் என்பது இங்கு புலப்படுகிறது. மேலும், தமிழன் தமிழனுக்கே எதிரி என்ற விவாதங்கள் இங்கு மெய்யாகத்தான் இருக்கச் செய்கின்றன. தொழிலாளர்களை அழைத்து வர நியமிக்கப்பட்ட கங்காணியும் ஓர் இந்தியர் ஆவார். தோள் கொடுப்பான் என்றெண்ணி விரித்த வலையில் சிக்கினர் நம் அப்பாவி மக்கள். தங்களுடைய சுயநலத்திற்காக மக்களை ஏமாற்றி வரவழைத்து அவர்களைத் தொடர்கடனாளிகளாக்கிய கங்காணிகளையும் மக்கள் கீழ்கண்டவாறு குமுறினர்.*

*"பகடியான வார்த்தையிலே*

*பால்மரத்தில் பணம் காய்க்கும்*

*ஆவடியில் முந்திக்கிட்டா அதிர்ஸ்டமும் தானேவரும்*

*இப்படியும் ஜாலாக்கு எப்படியும் போட்டாங்க"*

*எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மறையான சூழ்நிலைகளைக் கண்ட மக்கள் மனம் நொந்தனர். கல்வியறிவற்றவர்களாக இருந்தவர்கள் சுலபத்தில் ஏமாற்றப்பட்டதையும் எண்ணி வந்த கனவுகள் சிதைந்ததையும் நினைத்துக் கொதித்தனர். இதனைக் கீழ்கண்ட பாடலின் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.*

*"சீனிக்குக் காக்காய் ஓட்ட கூட்டினு வந்த*

*கறுப்புச்சட்டை கதிர்வேலு கங்காணி*

*லாலான்முள்ளு டிங்குன்னுதே - இங்கு*

*லப்பர்கொட்டை டப்புன்னுதே!"*

*இக்காலத்துத் தமிழ் மக்களின் சிந்தனையையும் நடத்தையையும் ஆராயும்போது பல செய்திகள் தெரிகின்றன. தென்னகத்திலிருந்து சஞ்சிக் கூலிகளாக வந்த இந்தியர்களிடையே நிலவிய சாதிக் கோளாற்றின் காரணமாகத் தன்மானம், ஊக்கம் ஆகியவற்றை இழந்த அடிமட்ட வர்க்கமாகத் தமிழர்கள் இருந்தனர். மேலும், உடலுழைப்புத் தொழிலைத் தவிர்த்து மற்ற திறன்கள் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. இதனால், பிற தொழிலை நாடாமலும் பிற துறையில் கால் பதிக்காமலும் அஞ்சி அடங்கி வாழ்ந்தனர். சீனர்களைவிடக் குறைந்த ஊதியத்திற்கு தமிழ் மக்கள் வேலை செய்யத் தயாராய் இருந்தனர். இவ்வனைத்து காரணங்களோடு அளவுக்கு மீறிய தாழ்வு மனப்பான்மை அவர்களை அடக்கியே வைத்திருந்தது. அதனால்தான் உரிமைகளைத் தட்டிக் கேட்கும் சீனர்களைப் போல் அல்லாது சொந்த அடையாளங்களைக் காத்துக் கொள்வதில் உள்ள உணர்வு தமிழர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. இதனாலேயே, தமிழர்கள் பின்தங்கி ஒடுங்கி சிரமத்தோடு வாழ்ந்தனர். வயிற்றுப் பசியொன்றைப் போக்குவதற்காக அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டனர். இதனைக் கீழ்கண்ட நாட்டுப்புறப்பாடல்வழி அறியலாம்.*

*"…ஓடிவர்றார் பூட்ஸ்காலால் உதைக்க*

*ஊடுருவிப் போவுதய்யா இதநினைக்க*

*அப்பப்பா பசிக் கொடுமை…"*

அதுமட்டுமல்லாமல், தங்களுக்கு நேரும் அநியாயங்களைத் தட்டிக் கேட்கத் திக்கற்றவர்களாய் இருந்தனர். போராட்டங்களைச் சந்தித்து மீள வேண்டும் என்ற போக்கையே அவர்கள் மத்தியில் காணமுடியவில்லை. கால் போன போக்கிலே கட்டளைகளுக்கு அஞ்சி அஞ்சி வாழ்க்கை நடத்தினர்.

"ஆயிரக்கணக்கானோர் இறந்துகொண் டிருக்கிறார்கள்

அப்படி ஒரு நிலை எனக்கு வரும்போது

என்னை வேலை செய்யச் சொல்லி எந்த முதலாளியும் கூறமுடியாது

கூலியாய்க் கொடுக்கும் சோளமும் எனக்குக் கிடைக்காது

தினமும் நூறு கசையடிகள் வாங்கும் அவலநிலையும் எனக்கு ஏற்படாது

காரணம் நான் மாண்டு விடுவதால்"

நிச்சயம் இறந்து விடுவோம் என்ற தளர்ந்த போக்குடனே வாழ்ந்து வந்தனர் என்பதை மேற்கண்ட பாடல் வரிகள் உணர்த்துகின்றன. பசிக்கொடுமை, அடி உதை என்ற அனைத்தும் உடலுக்கு மருந்துவிட்டது போல ஒரு தோரணையை இது கொடுக்கிறது.

கள்ளங்கபடமற்ற உழைப்பைக் கொட்டிய தமிழர்களின் வாழ்வை நேர வரம்பற்ற வேலை, குறைந்த ஊதியம், போதிய உணவு உடை இன்மை, தேவையான ஓய்வு உறக்கமின்மை, அடக்குமுறை ஆகியவை சீர்குலைத்தன. அடுத்து சப்பானியர் ஆட்சிக் காலத்திலும் ஓர் அடிமட்ட வர்க்கமாகவே தலைகுனிந்து வாழ்ந்தனர். அக்காலத்தில் எழுச்சியற்ற அடிமை மனப்பான்மையே சமுதாயத்தில் நிறைந்திருந்தது. எல்லாம் 'விதி' என்று நொந்து கொள்ளும் மூடநம்பிக்கை அவர்களை எழவிடாமல் செய்தது. அதுமட்டுமல்லாமல், சமுதாயத்தில் வழிகாட்ட நல்ல தலைமை இல்லாமல் இருந்தது. தொழிலாளர்களின் நலனைக் கருதி அரசியல் தொடர்போ, சமூக அமைப்போ, தொழிற்சங்க அமைப்போ விரிவடையவில்லை. மேலோட்டமாகச் சில அமைப்புகளே செயல்பட்டு வந்தன. 1930-களில் இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களிடையே ஓர் எழுச்சி பொங்கியது. மலாயா மத்திய இந்திய சங்கம் என்ற பெயரில் தொழிலாளர்களின் பிரச்சனையில் கவனத்தை முன்நிறுத்தியது. இவ்வியக்கம் அனைத்திந்தியத் தொழிலாளர் சங்கத்தோடு தொடர்பு கொண்டு இங்குள்ள மக்களின் நிலமைக்கு விடியலைத் தேடியது. இருப்பினும், இந்த முயற்சிகளாலும் மக்கள் அனுபவித்த துயரங்கள் குறைந்தபாடில்லை.

இவ்வாறாகச் சப்பானியர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன், சஞ்சிக் கூலிகளாக வந்த தமிழ் மக்கள் அடிமட்டத்தில் வாழ்ந்து மீளாத் துயரத்தில் இருந்தனர். மறுமலர்ச்சி சிந்தனை அற்று இருந்த தமிழர்களின் வாழ்வில் சயாம் மரண இரயில் பாதை புதிய தடத்தை ஏற்படுத்தியது. அதற்குப் பின் நடந்த இரண்டாம் உலகப் போர் பல அவலங்களைக் கட்டவிழ்த்தது. இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் வெள்ளையரை வெளியேற்ற சுபாஷ் சந்திரபோஸ் சப்பானியர் உதவியோடு வீரப்போர் நடத்தத் திட்டமிட்டார். அதற்காக இந்தியாவில் படை திரட்டினார். இது நாடெங்கும் எழுச்சிப் பேரலையை ஏற்படுத்தியது. மூதாதையர் வாழும் தாயக விடுதலைக்குத் தங்கள் பங்கினை வழங்க ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளமகளிரும் வந்தனர். விடுதலை உணர்வு மேலோங்கிய இக்காலக்கட்டம் பஞ்சத்தின் கொடுமையை உணர்த்தியதோடு துன்பத்தின் எல்லையையும் காட்டியது

**சப்பானியர் ஆட்சியின் தொடக்கம்**

1941-ஆம் ஆண்டு ஜப்பான் மலேசியாவைக் கைப்பற்றியது, இதன் விளைவாக பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தது. மலாயாவில் சப்பானியர்களின் ஆட்சி 15 பிப்ரவரி 1942 தொடங்கி 12 செப்டம்பர் 1945 வரை நீடித்தது. வாணிகப் போட்டியை மையமாகக் கொண்ட இரண்டாம் உலகப் போரின் தொடர்ச்சியாக மலாயாவை சப்பானியர்கள் கைப்பற்றினர். பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றித் தன்னாட்சியை நிறுவ சப்பான் மலாயா மீது போர்தொடுத்தது. "ஆசியாவை ஆசியர்களே ஆளவேண்டும்" என்ற சப்பானியர்களின் குறிக்கோள் இந்தப் போருக்கு அடித்தளமிட்டது என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆசிய நாட்டை வெள்ளையரிடமிருந்து மீட்டு அதனை ஆசியர் கையில் ஒப்படைப்பது ஒன்றே சப்பானிய அரசின் கொள்கையாக இருந்தது. இந்தக் கொள்கையானது மலாயா மக்களின் வரவேற்பைப் பெற்றது. இருப்பினும், மிகக் குறுகிய காலத்தில் நடந்த நிகழ்வுகள் அவர்களின் மனப்போக்கினை மாற்றியது. வெள்ளையர்களுக்கும் சப்பானியர்களுக்குமிடையே நடந்த போர் தென்னிந்திய தொழிலாளர் வாழ்வை மிகமிகக் கடுமையாகச் சீரழித்தது. பல்லாயிரக்கணக்கானோர் உயிர்களையும் உறவுகளையும் இழந்து பரிதவிக்கும்

கொடுஞ்சூழல் பிறந்தது. இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர் வசம் வீழ்ச்சி கண்ட மலாயா ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சியில் சிதைந்தது. முதலாம் உலகப்போர் முடிந்து இருள்சூழ்ந்த இக்காலம் அவலங்கள் நிறைந்ததாகும். இக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட பஞ்சமும் பட்டினியும் எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. உயிரிழப்பு மிகுந்த சப்பானியர் காலம் ஒவ்வொரு தமிழர்களின் நெஞ்சை இன்றளவும் பிழிகிறது. (சத்தியானந்தா, 1957. பக் 66).

**சப்பானிய ஆட்சியின் தாக்கம்**

சப்பானிய ஆட்சி மலேசியாவில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. மலேசியத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சப்பானியர், பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களைப் போலவே, தமிழர்களை ஒரு தொழிலாளர் வர்க்கமாகவே பயன்படுத்தி, அவர்களின் அடக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தினர். அவர்கள் எதிர்கொண்ட கொடுமைகள், அடக்குமுறைகள், சமூக மாற்றங்கள் ஆகியவை இந்த ஆட்சியின் நேரடியான விளைவுகளாக இருந்தன.

**அரசியல் தாக்கம்**

சப்பானிய ஆட்சியில் மலேசியா முழுவதும் புதிய நிர்வாக அமைப்பு அமல்படுத்தப்பட்டது. தமிழர்கள் அரசியல் வாழ்வில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டனர். சப்பானியர்கள், மலாயர்களை ஆதரித்து, இந்தியர்களையும் சீனர்களையும் குறைந்த முக்கியத்துவம் உள்ளவர்களாகப் பார்த்தனர். இதன் விளைவாக, பல தமிழர்கள் அரசியல் அதிகாரத்தை இழந்தனர். மேலும், சப்பானியர்கள் இந்திய தேசிய ஆர்மி (INA) உருவாக்கத்தை ஆதரித்தனர். சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான INA, மலேசியத் தமிழர்களிடையே இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதனால், மலேசியத் தமிழர்கள் INA-வில் சேர்ந்து இந்திய விடுதலைக்காக போராடத் தொடங்கினர் (முரசு, 2007, பக் 45). சப்பானியர் ஆட்சியில் தமிழ் சமூகத்தின் அரசியல் நிலை மேலும் மோசமடைந்தது. அரசியல் அமைப்புகளும் தமிழ் சங்கங்களும் சரிந்து விழுந்தன. பிரிட்டிஷ் காலத்தில் அரசியல் உரிமைகளுக்காக தமிழ் சமூகத் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் முற்றிலும் நசுக்கப்பட்டன. இதனால், தமிழர்கள் அரசியல் தளத்தில் பின்தங்கினர். பிற்காலக் காலனித்துவக் கோட்பாடு பார்வையில், பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**சப்பானியர்களின் நிர்வாக மாற்றங்கள்**

சப்பானியர்கள் மலேசியாவில் புதிய நிர்வாக மாற்றங்களை மேற்கொண்டனர். அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை அகற்றியதுடன், புதிய நிர்வாகத்தையும் உருவாக்கினர். மலாயர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது, ஆனால் தமிழர்கள் இரண்டாம் நிலை குடிமக்களாகக் கருதப்பட்டனர். இதனால், தமிழர்கள் அரசியல் மற்றும் சமூக வாழ்வில் பின்தங்கினர். மேலும், சப்பானியர் ஆட்சியில் தமிழ் தலைவர்கள் இருவேறு நிலைப்பாடுகளை எடுத்தனர்; சிலர் சப்பானியர்களுடன் இணைந்து பணியாற்றினர், ஆனால் சிலர் சப்பானிய ஆட்சியை எதிர்த்து போராடினர் (சுந்தரம், 2005, பக் 102). சப்பானியர்கள் கட்டாய வேலை முறையை (forced labor) செயல்படுத்தினர், குறிப்பாக ரயில்வே கட்டுமானத்திலும் தோட்டத் தொழிலிலும் தமிழர்களை வலுக்கட்டாயமாக இணைத்தனர். இதனால், தொழிலாளர்கள் கடுமையான சித்திரவதை அனுபவிக்க நேர்ந்தது (ராமச்சந்திரன், 2010, பக் 67). சப்பானிய ஆட்சியில் தமிழ் பள்ளிகள் சில செயல்பட்டாலும், ஆங்கிலக் கல்வி முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்டது. மேலும், ஜப்பான் மொழி கற்பதை கட்டாயமாக்கியதால், கல்வி துறையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது (முருகப்பன், 2012, பக் 88). தமிழ் சமூக அமைப்புகள் பலவீனமடைந்து, பொருளாதாரத்தில் பின்தங்கியதால், தமிழர்கள் கடுமையான வாழ்க்கை சிக்கல்களை எதிர்கொண்டனர். பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபோதும், சப்பானியர்கள் புதிய காலனித்துவர்களாக தமிழர்களைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழர்கள் அடிக்கடி புதிய ஆட்சியாளர்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**பொருளாதார தாக்கம்**

சப்பானியர்கள் மலேசியாவைக் கைப்பற்றிய பிறகு, மலேசியத் தமிழர்கள் பல்வேறு கட்டாய வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர் (Ramasamy, 1994). குறிப்பாக, பர்மா-தாய்லாந்து "மரண ரயில்பாதை" (Death Railway) கட்டுமானத்தில் தமிழர்கள் பெரிதும் ஈடுபடுத்தப்பட்டனர். மலேசியாவில் தமிழர்கள் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களாக இருந்தனர். ஆனால், சப்பானியர்கள் அவர்களை தங்களது போருக்காகக் கட்டாய வேலைக்கு அழைத்தனர். இந்த திட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் மிகக் கடுமையான சூழ்நிலைகளில் வேலை செய்து உயிரிழந்தனர். உணவு பற்றாக்குறை, நோய்கள், மிகுந்த உழைப்பு ஆகியவை அவர்களின் வாழ்க்கையை சீரழித்தன. மேலும் தோட்டங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற பொருளாதார மூலோபாயங்கள் சப்பானியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றதால், பல தமிழர்கள் வேலை இழந்தனர். சப்பானியர்கள் வழங்கிய குறைந்த ஊதியம் மற்றும் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, தமிழர்கள் உணவுக் கிடைப்பதற்காகப் பெரும் போராட்டம் மேற்கொண்டனர். இதன் விளைவாக, தமிழர்கள் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளைச் சந்தித்தனர். தோட்டங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற பொருளாதார நிறுவனங்கள் சப்பானியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றதால், பல தமிழர்கள் வேலை இழந்தனர். சப்பானியர்கள் வழங்கிய குறைந்த ஊதியம் மற்றும் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, தமிழர்கள் உணவுக் கிடைப்பதற்காகப் பெரும் போராட்டம் மேற்கொண்டனர்.

**சப்பானியர் ஆட்சிக்குப் பின்**

சப்பானியர் ஆட்சி, இரண்டாம் உலகப் போர் இவை இரண்டிற்குப் பின் தொடங்கி நாடு விடுதலை பெற்றது வரையிலான காலம் கலப்பு நிகழத் தொடங்கிய காலமாகக் கருதப்படுகிறது. இவை இரண்டும் ஏற்படுத்திய நிகழ்வுகளுள் விடுதலை உணர்வு முதன்மையானதாகும். போருக்கு முந்திய காலத்தில் தமிழர்களின் உணர்வுகள் அவர்கள் மூலத் தாயக விடுதலையிலேயே இருந்தது. இதே வேளையில் சப்பானியர்களிடமிருந்து வெள்ளையர்கள் மீண்டும் நாட்டைக் கைப்பற்றினர். அப்பொழுது மக்களிடையெ ஏற்பட்ட சிந்தனை மாற்றம் பல அவலங்களைத் தகர்த்தது என கூறலாம். குடிகொண்டிருந்த நாட்டைத் தாயகமாக ஏற்கத் தொடங்கினர். மக்களிடையே புதிய நம்பிக்கை பிறந்தது. திரும்பி வந்த வெள்ளையர்கள் இதனை உணர்ந்தனர். மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்று உணர்ந்தவர்கள் அவர்களின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினர். இக்காலத்தில் சமுதாய வாழ்வு, கடந்த காலக்கட்டங்களை விட சற்று மேம்பட்டிருந்தது. உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படை வசதிகள் விரிவடைந்தன. தோட்டப்புறத்தில் இருந்த இருள் நீங்கத் தொடங்கியது. அதிகாரக் கெடுபிடி குறைந்ததால் வாழ்வில் நம்பிக்கை ஏற்பட்டது. பழமைப் போக்கோடு சீர்த்திருத்தச் சிந்தனைகளும் பரவின. இருப்பினும் சாதியை விட்டுக்கொடுக்காத போக்கும் தொடர்ந்தது என்பதனை சொல்லியே ஆக வேண்டும். இதனால் காதலர்கள் தற்கொலை செய்வதும் கலப்புமணம் புரிந்தோர் குடும்பத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டதும் நடந்து வந்தன. தமிழர்களிடையே கிளர்ந்த உரிமை உணர்வு தாய்மொழிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டன. பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஆங்கிலேயர் கவனம் அளித்தனர். 1946 ஆம் ஆண்டு கல்விச் சட்டத்தைப் பிறப்பித்தனர். இச்சட்டம் இலவசத் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தியது. அதனால், தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நல்கை உயர்ந்தது. பயிற்றல் முறை வகுப்புகள், தகுதிமிக்க ஆசிரியர்களை உருவாக்க மீண்டும் தொடங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் உரிமைகளைத் தைரியத்துடன் தட்டிக் கேட்கும் மனப்பான்மை துளிர்ந்தது. தொழிலாளர்களுக்குக் குரல் கொடுக்கத் தொழிற்சங்கங்கள் உருவாகின. தங்களுக்கும் ஒரு பாதுகாப்புக் குரல் இருக்கின்றது என்றெண்ணி நம்பிக்கையும் ஆறுதலும் அடைந்தனர். இருப்பினும் இச்சங்கங்கள் சமுதாயத்தின் போக்கை மாற்றுவதிலோ, பண்பாட்டுணர்வைப் பரப்புவதிலே, பொருளாதாரத்தில் மேம்பாடுகாணச் செய்வதிலோ கருத்துச் செலுத்தவில்லை. இதனால் வளம்பெற்ற சமுதாயத்தின் உருவாக்கத்தைக் காண முடியவில்லை. தரமற்ற குடியிருப்புகள், சத்துணவு உண்ண வருவாய் போதாமை, குழந்தைகள் கற்பதற்கேற்ற சூழ்நிலை அமையாமை போன்றவை இதற்குக் காரணங்களாக அமைந்தன. மேற்கூறியது போல முந்தையக் காலக் கட்டங்களில் சமுதாய விழிப்புணர்வு குறித்து இவ்வியக்கங்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பதனைக் கண்டோம். ஆனால், காலப்போக்கில் இதில் திருப்புமுனை காணப்பட்டது. இயக்கங்களுக்கு முன்னோடியாக இருந்த அகில மலாயாத் தமிழர் சங்கம் செம்மைப்படுத்தப்பட்டு தமிழர் திருநாள் எனும் உயரிய விழாவை உருவாக்கியது. 1952-இல் உருவாக்கப்பட்ட இத்திருநாள் தாய்மொழி, கலை, பண்பாட்டு உணர்வுகளைத் தமிழர்களுக்குப் புகுத்தியது. மேலும் இவ்விழா தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை, பொருளாதாரச் சிந்தனை, வாழ்வளிக்கும் நாட்டைத் தாயகமாக ஏற்கும் மனப்பான்மை போன்ற புதிய சிந்தனைகளைப் பெற்றுத் தந்தது. சாதி,

மதம் இவை அனைத்தையும் கடந்து தமிழர்கள் ஒன்று திரள வேண்டும் என்ற நோக்கம் கொண்டது; குறித்த வெற்றியையும் கண்டது. அதே வேளையில் பட்டணத்தில் வாழும் தமிழர்களின் நிலை சற்று மேம்பாடு கண்டிருந்தது. அங்கிருந்த இயக்கங்கள் சமுதாயம், கலை, பண்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தன. மலேசியத் தமிழர்களின் குடியிருப்புகளை நோக்கும்போது பெரும்பாலோர் தோட்டப்புறங்களிலே வாழ்ந்து வந்தனர் என தெரிகிறது. வெளியுலகம் பற்றிய அறிவு அவர்களுக்குப் போதாத காரணத்தினாலும், ஒதுக்குப்புறமான சூழலில் வாழ்ந்ததாலும் பிறருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டவில்லை. அதனால் அவர்கள் மத்தியில் சிந்தனையில் ஒரு புத்துணர்ச்சியைக் காண்பது அரிதாகியது. ஆக, சுற்றுப் புறச் சூழல் மனிதனின் மனத்தையும் சிந்தனையையும் பாதிக்கின்றது என்பதனை இதன் வழி அறிய முடிகிறது. இதனையடுத்து தமிழர்கள் பிற இனத்தவருடனும் பிற இனத்தவர்கள் தமிழர்களுடனும் சேர்ந்தனர். இது பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது. விடுதலைக்காக மூன்று இனங்களும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்தன. கீழ்காணும் கவிதை தமிழர்களின் ஒற்றுமை உணர்வையும், நாட்டுப்பற்றையும், விடுதலை வேட்கையையும் வெளிப்படுத்துகிறது.

"எங்கள் மலாயா தங்கிடும் இன்பம்
பொங்கிட வேண்டாவா?
இந்திய சீனம லேசியர் யுரேசியர்
என்றுமிந் நாட்டினிலே- ஒன்றாய்
நன்றுடன் வாழ்ந்திடுவோம்!
யாவரும் ஈண்டு மலாயர்கள் என்று
இணையற்ற தோரின மாகவே மாறிச்
சத்தியச் செந்நெறிப் பன்னூல் கொண்டு
சாந்தியும் பெற்றிடுவோம்"

ஆனால், தோட்டப்புறத்து மக்களுக்கு விடுதலை கோரும் முழக்கங்கள் எட்டவில்லை. இருப்பினும், ஓரளவு படித்த இளைஞர்கள் வழி அதைப்பற்றி அறிந்து கொண்டனர். விடுதலையைப் பெறப்போகும் காலக்கட்டத்தில் பல சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று நாட்டின் உரிமை நலத்தை முழுமையாகப் பெறுவதற்குக் குடியுரிமை தேவை. இதனைப் பெற்றுக் கொள்வதில் தமிழர்கள் பெரும்பாலோர் கருத்துச் செலுத்தவில்லை. இதனால், பல இன்னல்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாத போக்கு தமிழர்களிடத்தில் அதிகம் இருந்தது. விடுதலையால் பல்வேறு துறைகளில் ஏற்படும் நன்மைகளை முழுமையாகப் பெற இவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவில்லை. விடுதலைக்குப் பின்னும் அந்நியருக்கு உழைத்த மனப்போக்கை மாற்றிக்கொள்ளாமலேயே இருந்து வந்தனர். இதனைக் கீழ்கண்ட வரிகளில் காணலாம்.

"மரமிருக்கு உளியிருக்கு
மனமிருக்கு உழைப்பதற்கு
மற்றத் தொழில் நமக்கெதுக்கு வேலப்பா-இதுவே
உற்ற தொழில் இதுநமக்குப் போதுமப்பா"

விடுதலை கண்டாலும் தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்ற ஆர்வம் தமிழர்கள் மத்தியில் குறைவாகவே இருந்து வந்தது. தோட்டமே நிலையானது என்று இருந்த தமிழர் வாழ்வில் விடுதலை சிறிய மாற்றத்தையே ஏற்படுத்தியது. தொடர்ந்து, சமுதாயச் சீர்கேடு என்று நோக்கையில் தமிழர்கள் வன்முறையில் ஈடுபடாமல் இருந்தனர். குடித்து விட்டு மனைவியைத் துன்புறுத்துவது, உறவினர்களிடையே சிறு சிறு கைகலப்பு போன்றவையே நிலவின. தமிழர்களால் நாட்டுக்கோ அல்லது பிற இனத்துக்கோ எவ்வகை ஊறும் விளையவில்லை. காரணம் புறம்போக்கு நிலப்பகுதியில் குடிசைக் கட்டி வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. தோட்டப்புறமே எல்லாம் என்ற நிலையிலே அவர்கள்

வாழ்ந்தனர். சொந்தத் தொழில், சொந்த வீடு, சொத்து போன்ற சிந்தனையில்லாதவர்களாக இருந்தனர். கட்டுக்குலையாத ஒரு சமுதாய அமைப்பு இருந்து வந்தது. பட்டணப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நன்மதிப்புடன் இருந்தனர். மருத்துவர், பொறியாளர், வணிகர், அரசு ஊழியர், பொதுப்பணித்துறை ஊழியர் என நல்ல வேலைகளில் அமர்ந்தனர் (முரசு, நெ. (1997).பக் 335). ஆனால் இந்நிலையானது பல காலம் நீடிக்கவில்லை. தோண்டத் துண்டாடல் என்ற போர்வையிலிருந்து சமூகச் சீர்கேடு எழ ஆரம்பித்தது. தோட்டப்புறத் தமிழர்கள் வீடு, வாசல், வேலை இழந்து, தங்க இடமின்றித் தத்தளித்தனர். பட்டணப் பகுதிகளையொட்டிய புறம்போக்கு நிலத்தில் குடிசை அமைத்தனர். மக்களின் இயல்பு வாழ்க்கை பாழாய் போனது. முறையான வாழ்வு நெறி இல்லாததால் சமுதாயக் கட்டமைப்பு சீரழிந்தது. மேலும், இவர்களுக்கு வழிகாட்டவும் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க நல்லவொரு தலைமையும் இல்லை. இது போதாதென்று தண்ணீர், மின்சாரம், சாலை, சுற்றுச்சூழல் வசதிகளோ, கல்விக் கூடங்களோ இல்லை. இந்நிலைகளே சமூகச் சீர்கேட்டிற்கு வித்திட்டன. சப்பானியர் ஆட்சிக் காலத்திற்கு முன்-பின், முதல் விடுதலைப் பெற்ற காலம் வரை மலேசியத் தமிழர்கள் அனுபவித்த கொடுமைகள் பல. மறுமலர்ச்சியற்று செயல்பட்டு வந்ததால் வாழ்வில் மேன்மை காண இயலவில்லை என்பதை மேற்கண்ட ஆய்வின் வழி அறிய முடிகிறது.

**கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு**

**பிற்காலக் காலனித்துவக் கோணத்தில் – தமிழர்கள் மற்றும் சப்பானிய ஆட்சி**

காலனித்துவ ஆட்சியின் அடக்குமுறைகளை புரிந்துகொள்ள பிற்காலக் காலனித்துவ கோட்பாடுகள் மிகவும் முக்கியமானவை. இவை, ஒரு சமூகத்தின் அடக்குமுறைகளையும், எதிர்ப்பினை உருவாக்கிய விதத்தையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

| விவரம் | **பிரிட்டிஷ் ஆட்சி** (1786–1942) | **சப்பானிய ஆட்சி** (1942–1945) |
|---|---|---|
| அரசியல் கட்டுப்பாடு | நிர்வாக அடக்குமுறை, வட்டாரத் தலைவர்கள் (local leaders) மூலம் ஆட்சி | நேரடியான இராணுவ ஆட்சி, கடுமையான கட்டுப்பாடு |
| பொருளாதாரம் | தோட்டத் தொழிலாளர்களாக தமிழர்கள் நிலையான (but குறைவான சம்பளம்) வேலை பெற்றனர் | கட்டாயத் தொழிலாளர் வேலைகள், குறைந்த ஊதியம், கடுமையான உழைப்பு |
| கல்வி | தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்வி | தமிழ் கல்வி முற்றிலும் தடை, ஜப்பானிய மொழி கட்டாயம் |
| சமூக வாழ்க்கை | மத வழிபாடு, சமூக அமைப்பு ஒரு வரையறுக்கப்பட்ட சுதந்திரத்துடன் நடந்தது | கோவில்கள் கட்டுப்படுத்தப்பட்டன, மத வழிபாட்டிற்கு தடைகள் |
| எதிர்ப்பு இயக்கங்கள் | தொழிலாளர்கள் சிலர் வேலைநிறுத்தம், இந்திய தேசியவாத இயக்கங்கள் | INA (Indian National Army) மூலம் சில தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் |

எட்வர்ட் சைட் கூறியதைப் போல, காலனித்துவத்தால் பிறமையாக்கப்பட்ட சமூகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சி தமிழர்களை ஒரு "தொழிலாளர் சமூகமாக" உருவாக்கியது. சப்பானிய ஆட்சி நேரடியான இராணுவ அடக்குமுறையை கொண்டுவந்தது. தமிழர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் அடக்குமுறைக்கு நேரடியாக முற்பட்டதில்லை, ஆனால், சப்பானிய ஆட்சியில் நேரடியான தாக்கம் இருந்தது. சப்பானிய ஆட்சி முடிந்தவுடன், தமிழர்கள் மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு திரும்பியது ஒரு காலனித்துவ சார்பு நிலையைக் காட்டுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது, தமிழர்கள் அவர்களின் கலாச்சாரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர், ஆனால், சப்பானிய ஆட்சியில் ஜப்பானிய மொழி கட்டாயமாக்கப்பட்டதால் கலாச்சார நாசம் அதிகமாக இருந்தது. இது கலாச்சார கலவையை ஏற்படுத்தவில்லை, ஆனால் ஒரு கலாச்சார அழிவை ஏற்படுத்தியது.

**முடிவுரை**

*சப்பானிய ஆட்சிக் காலத்தில் மலேசியத் தமிழர்கள் கடுமையானச் சோதனைகளை எதிர்கொண்டிருந்தனர். அரசியல், பொருளாதார சமூக மாற்றங்கள் அவர்களின் வாழ்வில் கசப்பான தாக்கங்களை ஏற்படுத்தின. ஆயினும், அவர்கள் எதிர்ப்புக் கொண்டாடிய வழிமுறைகள், எதிர்காலத்தில் அவர்களின் அடையாளத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துணை புரிந்தன. இவ்வாய்வு வரலாற்று மற்றும் அரசியல் சமூக ஆய்வுகளில் பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். சப்பானிய ஆட்சி தமிழர்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்தது. பிரிட்டிஷ் ஆட்சி ஒரு "தொழிலாளர் அடிமைத்தனம்" கொண்டு வந்தால், சப்பானிய ஆட்சி நேரடியான "இராணுவ அடக்குமுறையை" கொண்டு வந்தது. பிற்காலக் காலனித்துவ கோட்பாடுகளின் அடிப்படையில், தமிழர்கள் இருவேறு காலனித்துவ முறைகளின் பாதிப்புகளையும் எதிர்கொண்டு தங்களது சமூக அமைப்பினை மீண்டும் கட்டமைத்தனர்.*

**மேற்கோள் நூல்கள்**

1. *சுவாமி சத்தியானந்தா .*(1957). *மலாயா சரித்திரம். மனோன்மணி விலாச புத்தக சாலை:*
2. *கோலாலம்பூர்.*
3. *தண்டாயுதம் , இரா .* (1998) . *மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள். தமிழ்ப் புத்தகாலயம்.*
4. *முரசு , நெ .* (2007). *மலேசியத் தமிழரும் தமிழும்: தற்போதைய மலேசியத் தமிழர்.*
5. *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்: சென்னை.*
6. *முரசு , நெ.* (1997). *மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். அருள்மதியம் பதிப்பகம்: கிள்ளான்.*
7. Thamburaj, K. P., & Arumugum, L. (2022). Historical background of Malaysian Tamil folk songs. *Time and Mind*, *15*(1), 41-66.
8. Arumugum, L., & Thamburaj, K. P. (2017). *மலேசியத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் தோட்டப்புறத் தமிழ்த் தொழிலாளர்கள்*: Tamil Plantation Labourers in Malaysian Tamil Folk Songs. *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *5*(1), 98-107.

Copyright (c) 2025 Author

This work is licensed under a [Creative Commons Attribution 4.0 International License](https://creativecommons.org/licenses/by/4.0/).